# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,387—1962 නොවැම්බර් 9 වැනි සිකුරාදා—1962.11.9**

13,387 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 584 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 583 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

L.D.–B.47/41

### பிரசவ உதவிப்பணக் கட்டளைச் சட்டம்

1958 ம் ஆண்டின் 6 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (140 ம் அத்தியாயமாகிய) பிரசவ உதவிப்பணக் கட்டளைச் சட்டத்தின் 15 ம் பிரிவின் பிரகாரம் தொழில் தேசியமய சேவை மந்திரியால் ஆக்கப்பட்டு, செனேட் சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதி.

மை. போ த. சொ. சிரிவர்த்தன,<br>
தொழில், தேசியமய சேவை மந்திரி.

கொழும்பு,<br>
1962 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 31 ந் உ.

**ஒழுங்குவிதி**

(140 ம் அத்தியாயமாகிய) பிரசவ உதவிப்பணக் கட்டளைச் சட்டத்தின் 15 ம் பிரிவின் பிரகாரம் ஆக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ந் தேதியன்று வெளிவந்த 9,634 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரிக்கப் பட்டவையும், 1957 ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ந் தேதியன்று வெளிவந்த 11,046 ம் இல். வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதியால் திருத்தியமைக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன :—

(1) 8 ம் ஒழுங்குவிதிக்கு நேரடுத்துப்பின்னர் பின்வரும் புதிய ஒழுங்கு விதியை இடுதலாலும் :—

"8அ. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் வேலை பார்ப்பதும், முற்றிலும் அல்லது பிரதானமாய் இயந்திரத் தொழிலில் அல்லது கட்டடத் தொழிலில் ஈடுபட்டுள்ளதுமாகிய தொழிற்சாலையல்லாத தாபனம் யாதாயினும், இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக விதிக்கப்பட்ட ஒரு தாபன மாகும். ";

(2) 9 ம் ஒழுங்குவிதியில் " அறிவித்தற் புத்தகம் " என்பதன் சொற்பொருள் விளக்கத்திற்கு நேரடுத்து முன்னர், பின்வரும் புதிய சொற்பொருள் விளக்கங்களை இடுதலாலும் :—

" " கட்டடத்தொழில் " என்பது, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச்சட்டத்தின் 6 ம் பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப்பட்டு 1949 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ந் தேதியன்று வெளிவந்த 10,054 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டதும், பின்னர் திருத்தியமைக்கப்பட்டதுமான கட்டளையிலுள்ள அதே பொருளையே உடையதாகும் ;

" இயந்திரத்தொழில் " என்பது (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 6 ம் பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப் பட்டு 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் தேதியன்று வெளிவந்த 9,224 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டதும், பின்னர் திருத்தியமைக்கப்பட்டதுமான கட்டளையிலுள்ள அதே பொருளையே உடையதாகும் ;".

11–393.

---

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் என்னால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளை என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

ரி. பி. இலங்கரத்தின,<br>
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,<br>
1962 ம் ஆண்டு ஒட்டோபர் மீ 29 ந் உ.

**அட்டவணை**

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 10. 9.62 | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), பொலனறுவ வட்டாரம் .. | உபஉணவுப் பொருட்கள் | .. 25.9.62 ம் திகதியைக்கொண்ட 13,315 ம் இலக்க |
| 5.10.62 | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | உபஉணவுப் பொருட்கள் | .. 5.10.62 ம் திகதியைக்கொண்ட 13,336 ம் இலக்க |
| 8.10.62 | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மன்னார் வட்டாரம் | உபஉணவுப் பொருட்கள் | .. 10.10.62 ம் திகதியைக்கொண்ட 13,341 ம் இலக்க |

11–328.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் என்னால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளை என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 29ந் உ.

ரி. பி. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்கு வரத்து, அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதி யானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப் பட்டது |
|---|---|---|---|
| 21. 8.62 | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | கருவாடும் இறால் கருவாடும் .. | 21.8.62 ம் திகதியைக் கொண்ட 13,270 ம் இலக்க |
| 30. 8.62 | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | உப உணவுப் பொருட்கள் .. | 30.8.62 ம் திகதியைக்கொண்ட 13,278 ம் இலக்க |
| 1. 8.62 | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. கண்டி மாவட்டாரமும், உடகேவகெற்ற பிரிவு, நுவரெலிய மாவட்டாரமும் | மாட்டிறைச்சி .. | 7.8.62 ம் திகதியைக்கொண்ட 13,255 ம் இலக்க |
| 1. 8.62 | டிெ .. .. | ஆட்டிறைச்சி .. .. | 7.8.62 ம் திகதியைக்கொண்ட 13,255 ம் இலக்க |
| 25. 6.62 | டிெ .. .. | மாசிக் கருவாடு அல்லது போனிட்டோ மீன் | 31.7.62 ம் திகதியைக்கொண்ட 13,236 ம் இலக்க |
| 20. 8.62 | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), .. குருணைகல் வட்டாரம் | மாட்டிறைச்சி .. .. | 23.8.62 ம் திகதியைக்கொண்ட 13,271 ம் இலக்க |
| 23. 8.62 | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), .. மாத்தறை வட்டாரம் | கருவாடும் இறால் கருவாடும் .. | 4.9.62 ம் திகதியைக்கொண்ட 13,291 ம் இலக்க |
| 31. 7.62 | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), .. இரத்தினபுரி வட்டாரம் | டிெ .. .. | 31.7.62 ம் திகதியைக்கொண்ட 13,236 ம் இலக்க |
| 27. 6.62 | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), .. புத்தளம் வட்டாரம் | மாசிக் கருவாடு அல்லது போனிட்டோ.. மீன் | 2.7.62 ம் திகதியைக்கொண்ட 13,190 ம் இலக்க |

11–327.

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### வனவிலங்குப் பரிபாலன சட்டத்தின் 13 (1) ம் பிரிவின் (அத்தியாயம் 469) கீழ் அறிவித்தல்

1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ந் திகதி அரசாங்க கசெற் இல. 13,241 ல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் தொடர்பாக :

அனுராதபுர டிஸ்திறிக் அரசாங்க அதிபரும், டிஸ்திறிக் பாதுகாவலருமான உப்பாலி குணரத்ன ஆகிய நான் மேற் குறிக்கப்படும் விளம்பரத்தை 1962 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி வரை நீடித்துள்ளேன் என்று இத்தால் அறிவிக்கிறேன்.

அத்துடன் குறிக்கப்பட்ட பிரிவின், நுவரகம்பலாத்தை கிழக்குப் பகுதியில் கிராம இல. துலானை 17 ஆகிய மகாகும்புக்கொலலாவ கிராமத்தின் எல்லைகளுக்குள்ளே இந்த யானை சேதப்படுத்தும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

யு. எ. குணரத்ன,
டிஸ்திறிக் அரசாங்க அதிபர்.

அநுராதபுரம் கச்சேரி,
1962 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 25 ந் உ.

11–304.

### அனுராதபுரம் கூட்டுறவுப் பிரிவைத் திருத்தி அமைத்தல்

15.11.62 தொடக்கம் அனுராதபுரக் கூட்டுறவுப் பிரிவு பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுமென இத்தாற் சகலருக்கும் அறிவிக்கப்படுகிறது :

அனுராதபுரம் தெற்குப் பிரிவு பின்வரும் காரியாதிகாரிகளின் பகுதிகளைக்கொண்டிருக்கும் :—

(1) நுவரகம் பலாத்த மேற்கு.

(2) கலாகம் பலாத்த.

(3) குறுநு பலாத்த தெற்கு.

அனுராதபுரம் வடக்குப் பிரிவு பின்வரும் காரியாதிகாரிகளின் பகுதிகளைக் கொண்டிருக்கும் :—

(1) நுவரகம் பாலத்த கிழக்கு.

(2) குறுநு பலாத்த வடக்கு.

(3) உடியங்கலாம கோறல.

(4) வவுனியா சிங்களப் பிரிவு.

ரி. ஈ. குணரத்ன,
கூட்டுறவின் ஆக்க ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவுத் துறை,
த. பெட்டி 419,
கொழும்பு,
1962, ஒக்ரோபர் 31 ம் தேதி.

11—406.

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.